G. Swaminatha Iyer

உ

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் துணை.

கடவுளைநம்பினோர் கைவிடப்படார்.

புதுக்கோட்டை சமஸ்தானம்

மலையிற்கோயிலென்று பெயர் விளங்கும்

திருநாவலங்கிரி

ஸ்ரீ முருகக்கடவுள் பேரிற் புகழ்மணிமாலை,

அறுபத்துநான்கடி ஆசிரியவிருத்தம்,

இவை

பிரஹ்மஸ்ரீ மகா கனந்தங்கிய வீமகவியவர்கள் மாணுக்கர்

மேற்படி சமஸ்தானம் விரையாச்சிலை

வித்துவான்

அம்பலச்செட்டியார் என்னும்

மதுரகவி

சு. அ. சு. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

மேற்படி சமஸ்தானம் நச்சாந்துபட்டியில் வசிக்கும்

இளையாற்றக்குடிக்கோயில் பெருமருதூருடையார்

மகா-ள-ள-ஸ்ரீ சுப. வீர. வீரப்பசெட்டியாரவர்களால்

அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

விக்கிரம வருடம்] [1940.

உ

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் துணை.

புதுக்கோட்டை சமஸ்தானம்

சம்புகிரி என்றும், உருக்கொம்புமலை என்றும், திருநாவலங்கிரி என்றும் பெயர் வாய்ந்து; மலையிற் கோயிலென்று விளங்கும்

திருநாவலங்கிரி ஸ்ரீ முருகக்கடவுள் பேரிற் புகழ்மணிமாலை,

அறுபத்துநான்கடி ஆசிரியவிருத்தம்,

இவை

மேற்படி சமஸ்தானம் திருமெய்யந்தாலூகா

விரையாச்சிலை அம்பலமும்

இலுப்பைக்குடிக் கோயிலாரும் ஆகிய

ம-௱-௱-ஸ்ரீ சு. அ. அடைக்கலவஞ்செட்டியாரவர்கள் குமாரன்

வித்துவான் அம்பலச்செட்டியார் என்னும்

மதுரகவி

சு. அ. சு. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

மேற்படி சமஸ்தானம் நச்சாந்துபட்டியில் வசிக்கும்

இளையாற்றக்குடிக்கோயில் பெருமருதூருடையார்

ம-௱-௱-ஸ்ரீ சுப. வீர. வீரப்பசெட்டியாரவர்களால்

அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

விக்கிரம வருடம்] [1940.


ELSON & CO.
MADRAS

சுப்பிரமணியர் திருநாமங்கள்.

முருகன்
அரன்மகன்
அறுமீன்காதலன்
அறுமுகன்
ஆசான்
ஆண்டலைக் கொடியோன்
கங்கை மைந்தன்
கடம்பன்
கந்தன்
கலையுணர் புலவன்
காங்கேயன்
கார்த்திகேயன்
குகன்
குழகன்
குமரன்
குறிஞ்சி வேந்தன்
குன்றெறிந்தோன்
கௌரிநந்தனன்
சண்முகன்
சரவணபவன்
சிகிவாகனன்
சிலம்பன்
சுரேசன்
சூர்ப்பகைவன்
செட்டி
செவ்வேள்
சேந்தன்
சேய்
சேவற்கொடியோன்
தாருகற்செற்றோன்
தாருகாரி
தெய்வானை காந்தன்
தேவசேனாதிபதி
பாவகி
மஞ்ஞையூர்தி
மாயோன் மருகன்
முருகு
வரைபக வெறிந்தோன்
வள்ளிமணாளன்
வாகுலேயன்
விசாகன்
வேலன்
வேலிறைவன்
வேள்
வானோர்தலைவன்
பன்னிருதோளான்
சாமி

திருமுகங்கள் ஆறுக்கும் பெயர்.

1. பிரணவம்
2. இச்சாசத்தி
3. ஞானசத்தி
4. கிரியாசத்தி
5. ஆதிசத்தி
6. பராசத்தி

தேவிமாரிருவருக்கும் பெயர்

தெய்வானையம்மை—கிரியாசத்தி
வள்ளியம்மை—இச்சாசத்தி
கதிர்வேல்—ஞானசத்தி

கொடி 2.

1. **ஆண்டலைக் கொடி.**
   இது ஆண்மகன்றலையாகவும் உடல் புள்ளின்வடிவமாகவும் உள்ளது.
2. **வெண்சேவல்.**

வாகனம் 3:—மயில், செம்மறிஆட்டுக்கடா, யானை.

துணைவர் நவவீரர்கள்:—இவர்கள் ஒன்பதுபேரும் பார்வதி தேவியாருடைய காலில் அணிந்த சிலம்பில் நின்றும் சிந்திய ஒன்பது இரத்தினங்களும் நவசத்திகளாகிச் சிவத்தை இச்சித்து நோக்கித் தனித்தனி ஒவ்வொரு சத்திகளிடத்தும் பிறந்தவர்கள். இவர்களில் முதற்சத்தியாகிய இரத்தினக் கன்னிகைக்குப் பிறந்தவர் வீரவாகுதேவர். இவர் பராக்கிரமத்திலும் வீரகுணங்களிலும் மிகச்சிறந்தவர். ஸ்ரீ முருகக்கடவுளின் கணத்தலைவராகவும் சூரசங்காரத்துக்குப் பேருதவியாளராகவும் இருந்தவர். விசுவாமித்திரர் வேண்டுகோளுக்கு இசைந்து அரிச்சந்திரனை அடிமைகொள்ளும் பொருட்டுச் சண்டாளனாக அவதரித்தவரும் இவரே. படை இரண்டாயிர வெள்ளம்.

படைவீடு ஆறுகளின் பெயர்.

1. மூலாதாரத்தலம் — திருப்பரங்குன்றம்
2. சுவாதிட்டானத்தலம் — திருச்சீரலைவாய்
3. மணிபூரகத்தலம் — திருவாவினன்குடி
4. அநாகதத்தலம் — திருவேரகம்
5. விசுத்தித்தலம் — பழமுதிர்சோலை
6. ஆக்கினைத்தலம் — குன்றுதோறாடல்

திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூர். திருவேரகம் என்பது சுவாமிமலை. பழமுதிர்சோலை என்பது சோலைமலை சுப்பிரமணியஸ்தலம் இதற்கு அழகர்மலை என்றும் பெயர். மதுரைக்கருகிலுள்ள விஷ்ணுதலம் இது நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்று.

ஸ்ரீ சுப்பிரமணியருக்கு மயில்வாகனம் அசுரனோடு சமர்புரியச் செல்லுங்காலத்திலேயே உண்டென்று கந்தப்புராணங் கூறுகிறது.

சாற்றுக்கவி.

திருச்சிராப்பள்ளி ஜில்லா,

மருங்காபுரி சமஸ்தான வித்துவான், மகா-௱-௱-ஸ்ரீ

ஆ. சத்திவேற்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரியா தனத்தின் மேலிருந்தே
யம்பொற் குடைக்கீ ழரசியற்றும்
அரிமா மருகன் † சம்புகிரி
யமருங் குமர னடிமலர்க்கு
மருசேர்ந் திலகும் புகழ்மணிப்பா
மாலை யுரைத்தான் விரசைநகர்
மருவும் மதுர கவிச்சுப்ர
மண்யன் றேவா வமிர்தமொத்தே.

(நேரிசை வெண்பா)

உலகம் புகழு முயர்நாவன் முன்சேர்
திலகச் சிலம்பமருஞ் சேய்க்கே—யிலகப்பா
மாலையொன்று தந்தான் மதிசுப் பிரமணியன்
மாலையொன் றுமதியு வந்து.

---

† சம்பு—என்பதற்கு நாவல் என்று பொருள் உளதால் நாவலங்கிரி என்று பெயர் பெற்றது.

சாற்றுக்கவி.

புதுக்கோட்டை சமஸ்தானம் ஸ்கூல் இன்ஸ்பெக்டராக
இருந்தவரும், மாட்சிமிக்க மகாராஜா அவர்களின்
தமிழாசிரியரா யிருந்தவருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ
பண்டித R. உலகநாத பிள்ளை அவர்கள்
இயற்றிய
சந்தவிருத்தம்.

திருமருவு மேருமலை யெனமருவு நாவலந்
  திகிரிமிசை மருவுமுருகன்
றிகழ்பதும மலர்மிளிரு மடிகளநு தினமுநினை
  திருமருவும் விரசைநகரிற்
பொருள்மருவு மினியதமிழ் தனைமுழுது முறைமை [யொடு
  புகலவக மதிலுணர்ந்தோன்
புவிமுழுது மரசுபுரி யரசர்புகழ் தனிலுமுயர்
  புகழ்மருவு புலவர்நண்பன்
அருள்மருவு மந்தணர்கள் குலமருவும் வீமகவி
  அரசனடி பரவுசீடன்
அரியதமிழ் தனிலுமிக வலவனென யெவருமிக
  அறையுமெழில் சுப்ரமண்யன்
மருமருவு குகனின்மிசை மழைபொழித லெனமருவ
  மணிமருவு மாலைசொற்றான்
மலையரையன் மகள்கணவன் விதிமனைவி யொடுமுரகன்
  மகிழ்வொடு வியப்பமாதோ.

(நேரிசை வெண்பா)

காலனையும் வெல்லுங் கடுநரகந் தேய்த்துவிடும்
மேலை யிருவினையும் வேரறுக்கும்—மாலைதனைச்
சொற்றான் முருகனுக்குச் சுப்ரமண் யக்கவிஞன்
வற்றாச் சமுத்திரமா மண்.

சாற்றுக்கவி.

புதுக்கோட்டைசமஸ்தானம் ம-ா-ா-ஸ்ரீ மகாராஜா அவர்கள்
கல்லூரித் தமிழாசிரியர் பிரஹ்மஸ்ரீ
பண்டித நா. கனகராஜையரவர்கள் B. O. L.,
இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சம்புமலைக் கோயில்வளர் திருமுருகப்
பரஞ்சுடரின் றாள்கள் போற்றி
அம்புவியிற் றமிழ்ச்சுவைநன் குணர்பவர்கள்
மனந்தரிக்க அணிந்தான் மாலை
நம்புமவர்க் கருள்பழுக்கும் குமரனடி
மறவாத நாவின் செல்வன்
பைம்புயல்போற் பொழிகரத்துப் பொருள்வணிகன்
அம்பலனும் பாவல் லோனே.

(சந்தவிருத்தம்)

நாவ லங்கிரி மேவு கந்தனை நாளு நெஞ்சினி னுடுவான்
நாவ லந்தரு தூய பைந்தமிழ் நன்ன ரோதிய நாவலான்
பாவ லந்தரு மாலை யன்பொடு பாடி நின்று பராவினுன்
யாவனன்பருள்மேவுமம்பலன்ஈகைகண்டவர்நேயனே.

சாற்றுக்கவி.

இராமநாதபுரம் ஜில்லா,

கடலாடி வித்துவான் மகா-௱-௱-ஸ்ரீ

துரைச்சிங்கம்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கனியுநறுங் கற்பகமாம் வந்தடைவார் மனத்துயரங்
களைந்து மேன்மை
தனையுதவச் சம்புகிரி தனின்மயின்மே லரசாளுஞ்
சண்மு கற்கு
நனிதிகழும் புகழ்மணிப்பா மாலைபுகன் ருன்விரசை
நகரில் வாழும்
புனிதமிகும் அடைக்கலவன் றவத்துதித்த சுப்ரமண்யப்
புலவ ரேறே.

அவையடக்கம்.

(நேரிசை வெண்பா)

கொம்பினிற்றேன் கண்டு கொளமுயலும் நொண்டியைப்போற்
சம்புகிரி வேலவன்ருள் சார்மாலை—அம்புவியில்
உற்றபெரி யோர்முன் னுரைத்தே னதிற்பிழைகள்
பற்றிடினுங் கொள்வார் பரிந்து.

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் துணை.



உருக்கொம்புமலை என்றும், சம்புகிரி என்றும், திருநாவலங்கிரி என்றும், பெயர் வாய்ந்து, மலையிற்கோயிலென்று விளங்கும்

திருநாவலங்கிரி

ஸ்ரீ முருகக்கடவுள் பேரிற் புகழ்மணிமாலை.

வெள்ளைவிநாயகர்—காப்பு.

(நேரிசை வெண்பா)

மங்களஞ்சேர் வள்ளி மருவுமுரு கேசனின்மேற்
றுங்கமிகும் மாலைதனைச் சொல்லுதற்கு—எங்குநிறை
கற்பகமே வெள்ளைக் கணபதியே செங்கமலப்
பொற்பதத்தைத் தாள்வாயிப் பூ.

வலம்புரி விநாயகர் துதி.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

நலமிகுங் கொன்றை தும்பை
நற்சடை முடிமேற் சூடும்
பொலமிகும் பிஞ்ஞ கன்பாற்
பொதிகைமா முனிவன் கொண்ட
பலன்றருங் கரக நீரைப்
பாரினிற் கவிழ்த்த செங்கை
வலம்புரி விநாய கன்றன்
மலரடி சென்னி சேர்ப்பாம்.

திருக்காழீச்சுரர் துதி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

கார்வளர் நாவற் கிரிதனி லுற்ற
கந்தவே டனைக்கனிந் தேத்த
ஊர்வள ரகில சராசரந் தனக்கும்
இலங்குவான் றெய்வங்க டனக்குஞ்
சீர்வள ருயிருக் குயிரென நிறைந்து
சிவபரஞ் சுடரதாய் விளங்குந்
தார்வளர் திருக்கா ழீச்சுர னபயத்
தாடனை முடிதனிற் றரிப்பாம்.

தர்மசம்வர்த்தனி துதி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

சீருறுங் கருணைக் கடலொரு வடிவாய்த்
திகழுல கினிலறம் வளர்க்குந்
தாருறுங் கூந்தற் றழைதர்ம சம்வர்த்
தனிமலர்ப் பதந்தனைத் துதிப்பாங்
காருற முழங்கும் நாவலங் கிரிமேற்
கலபமா மயின்மிசை யோங்க
ஏருற வமர்ந்த கந்தவே டக்கிங்
கிசைந்தசொற் றழைத்திடு தற்கே.

மலைக்கொழுந்தீச்சுரர் துதி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

நின்மல மாக்கும் பவப்பிணி போக்கும்
நிகரினன் முருவலங் கிரிமேல்
என்மனங் கனிந்த கந்தவேள் கழற்கண்
ணியம்பிய மாலையு மோங்கத்
தன்மய மாக வுலகெலாம் பறந்து
தங்கிவான் கருணையே பொழியுஞ்
சின்மயா னந்த மலைக்கொழுந் தீசர்
சேவடி சென்னிமேற் சேர்ப்பாம்.

சடாமுனி துதி.

(பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

சுத்ததத் துவநித்தி யானந்த சைதன்ய
சுகபோத நாதமயமாய்த்
துரியாதி தீதவந் தக்கரண மும்கடந்
தோங்குசிவ சோதிவடிவாய்
மத்தக நிகர்த்ததன மலைவல்லி யொடுபங்கன்
மருவுநா வற்கிரியின்மேல்
மலைக்கொழுந் தீசர்சந் நிதிநின்று பெருகிவரு
மாவருளை வாரியுண்ட
கத்தனே கனகமணி யாரகே யூரசிங்
காரலங் கிர்தமிக்க
காந்தியுறு பொற்சரிகை யாற்சொலிக் கின்றவுயர்
கலிங்கமிடை யிற்றிமிர்ந்து

சத்துருத் திரள்கடிந் திட்டுடல் சுவைத்தவொண்
டனிவாட் டுலங்குகரனே
தடாதகைத் தாயருள் விடாதுபெற் றோங்குஞ்
சடாமுனித் தெய்வமுகிலே.

இடும்பன் துதி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

காவலங் கிரியின் மிகவுயர் பொதிகைக்
கடமுனி களிப்புற வன்று
பூவலங் கிரிகை யாகவுங் கொண்டு
புண்ணிய மோங்குறுங் கிரியை
நாவலங் கிரியி னுறைமுரு கேசன்
நற்றிருச் சந்நிதி யடைய
மாவலுக் கொண்டு காவடி தனைத்தோள்
வைத்திடு மிடும்பனைத் துதிப்பாம்.

பதினெண் சித்தர்கள் துதி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

மத்தகக் களிறும் மங்குலு மிரண்டு
மயங்குறுந் தம்மினந் தோன்று
வித்தக மோங்கும் நாவலங் கிரிமேல்
விண்ணவர் மண்ணவர் வியப்ப
எத்தலங் களினும் எக்கிரி யிடத்தும்
இயங்குறு மழிவிலாப் பதினெண்
சித்தர்தங் கமலப் போதினை நாளுஞ்
சென்னியிற் கொண்டுபோற் றிடுவாம்.

சரஸ்வதி துதி.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

வெற்பவள வாவளர்ந்து ததும்பி விம்மி
வெறிகமழும் நறுங்களபப் புளகக் கொங்கைப்
பொற்பவள வாயாளைப் போத னந்நாப்
புகுந்துநடம் புரிபவளைப் பொருள்க டேற
அற்புதஞ்சேர் தடக்கையினன் முறையுந் தாங்கி
அலர்கமலத் தவிசினுறை படிகத் தாளைச்
சொற்பொலியும் பசுங்கிளியை யுலக மீன்ற
சுந்தரியை யநவரதந் துதிப்பாய் நெஞ்சே.

ஸ்ரீ முருகக்கடவுளின் குறுநிசயங்கூறிய

(நேரிசை வெண்பா)

பாரி யிவர்க்குநிகர் பார்த்ததில்லை நன்கொடையிற்
காரியொடு † மூவேழுங் காணுதே—சீரினுயர்
இந்திரனு மொவ்வா னியம்பு மொழியிலரிச்
சந்திரற்கு மேலெனவே சாற்று.

---

† மூவேழு என்பதற்கு 21-வள்ளல்கள், அதில் முதலேழு வள்ளல்:- குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி; இடையேழு வள்ளல்:-அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன்; கடையேழுவள்ளல்:-எழிலி, ஓரி, நள்ளி, பாரி, பேகன், மலையன், காரி.

இம்மாலையின் குற்றநீக்கி உன்றிருச்செவியில் ஏற்றருளெனக் கூறிய

(நேரிசை வெண்பா)

வந்திக்கா மாமுடிமேன் மண்கூடை யைச்சுமந்து
சிந்திப்போம் பிட்டுண்ட சீமானின்—சொந்த
மகனேயான் சொல்லும்பா மாலைவழு நீக்கிக்
குகனேயுன் பொற்செவியிற் கொள்.

இதுவுமது.

கட்டளைக்கலித்துறை.

கோழிக்கு மோர்கவி குஞ்சுக்கு மோர்கவி கூறுவதோ
மாழைக் குமரவென் றேதும்பா வாணனை வன்மையிற்பிற்
கோழிக்கு முட்டையென் றேதிக் கவிபெற்ற கொள்கையைப்போல்
ஏழைக் குழந்தைசொற் றள்ளாது கொள்ளெனை ஈன்றவனே.

சேவலின் பெருமை.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கனைகடல்க ளலைசுவற வடமேரு நிலைகெடக்
கறையொழுகு முள்ளெயிற்றுக்
கட்செவி நெளிக்கதிக் கடகளிறு வீறிடக்
கண்ணன்வட தருவின்மறையத்
தனிமறை யுரைக்குமயன் முளரிமலர் தனில்விழச்
சசிமணா ளன்கலங்கத்
தபனன்மதி நிலைவிடத் துடுவினம் பொலுபொலென்
றரணிதனி லுதிரவெஞ்சூர்

பணமிகப் பறையறைய மங்குல்சள சனௌனவிழு
　　மழைசொரிய மூவுலகமும்
மடமடென வுமையரனு மிதுபுதுமை யென்னவெவ்
　　வாயைத் திறந்துகூவும்
கினதத்தி லாதவ னெழுந்தொளி பரப்பவேள்
　　நிலவுதே ரிற்றுவசமாய்
நின்றுநிர்த் தனமிடுந் தசநாத முற்றசெந்
　　நிறக்குடுமி யெண்சேவலே.

இதுவுமது.

(நேரிசை வெண்பா)

சீரிற் சிறந்தோங்குஞ் செவ்வேளின் றேரிருந்து
வீரியமாய்க் குக்கூகூ வென்றுரைக்குங்—கூரியதோர்
மூக்குடைய குக்குடமே மோகமிகும் மாலைசொல்ல
வாக்கருள்வ தற்கிங்கே வா.

மயிலின் பெருமை.

(பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

அண்டதா ரகையுதிர மண்டலம் பிளவுபட
　　அட்டதிக் கயமூவி றிட்
டலறிடக் கடல்வறள முறைவிடுத் திரவிமதி
　　அமரவெற் புகழுமுழிக்
கொண்டல்போற் சுழலுறக் கற்பாந்த மோவெனக்
　　குவலயந் தாங்குசேடன்
கொண்டவிட மதையுயிர்த் துளறியுடல் பதறிடக்
　　கூவிநின் றபயமென்னச்

சண்டனென வேபாத நடனமிட் டுக்களந்
தனிலவுணர் படைநடுங்கச்
சடசடென நெடியசிறை தனையடித் தினியபுகழ்
சார்ந்தொளி பரப்பிஞானத்
தண்டமொடு மணியலை கொழிக்குஞ் சுவேதத்
தடங்கரையி லோங்குகந்த
சாமிகுற வஞ்சிகுஞ் சரிகளிரு பாலுறத்
தாங்குறுஞ் சித்ரமயிலே.

வேலின் பெருமை.

(பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

அட்டமா மலைகளொடு யெட்டுநா கங்கடிசை
ஆம்பலெட் டுந்திரும்பி
ஆடவே மன்மருள மாரவே ளஞ்சமல
ரயனும் நயந்துநாடக்
கொட்டமிடு காளிகா ளாத்திரிகள் பூதமொடு
கோரவே தாளமலைகை
கொடிபருந் துகள்கழுகு நாய்நரி விருந்தென்று
குதுகலங் கொண்டுதேடக்
துட்டநிசி சரர்கள்விடு பட்டுத் திடுக்கிட்டு
துன்பத் தழுந்திவாடச்
சூரனின் றலைசிங்க முகனிப முகக்காளை
சுதனெனும் பானுகோபன்
மட்டடங் காப்படை நிணத்தசை யருந்திசூர்
மாவையிரு கூறுசெய்து
வாகைகொண் டமரர்க டுதிக்கமுரு கன்கரம்
வந்திலகு முக்ரவேலே.

கிரி மகத்துவம்.

(பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

உனதுபொற் கோபுரங் கண்டுதரி சித்துளோர்
உலகெலா மரசாளுவார்
உன்கிரியை வலமாக வந்தபேர் விண்ணுலகில்
உம்பர்படை சுற்றவாழ்வார்
புனன்மேவு நின்சுனையின் மூழ்கினோர் பவமெலாம்
போக்கிமா சுத்தராவார்
புந்திதனி னின்னும மொருகால் நினைப்பவர்கள்
புகலரிய முத்திசேர்வார்
கனிவாக நின்றொண்டு புரிவோர்கள் பிறவியின்
கடனின்று கரையேறுவார்
காணரிய நின்றிருத் தாள்கண்டு போற்றுவோர்
கனதியான் சொல்லவெளிதோ
தனதனுங் கைகுவித் தஞ்சலி குயிற்றுமுயர்
தாரகப் ரம்மமயமே
தாதவிழு நீபமலர் மாலையணி மார்பனே
சண்முகத் தெய்வமணியே.

இதுவுமது.

(நேரிசை வெண்பா)

மங்குல் படிநின் மலையினடி வாரமதிற்
றங்கியொரு போதிருப்போர் தங்களுக்குச்—செங்கமல
மாது திருவருளும் மாறாத நற்கதியுஞ்
சாதனமாய்ச் சித்திக்குந் தான்.

உ

சிவமயம்.



ஸ்ரீ முருகக்கடவுள் பேரிற் புகழ்மணிமாலை.

(ஆசிரிய விருத்தம்)

கேசாதி—பாதச் சிறப்பு.

சீருற்ற மணிமகுட முடிகளோ ராறும்வெண்
டிருநீ றணிந்தநுதலுஞ்
செய்யருத் திராட்சமணி மாலிகா பரணமுந்
திரண்டவரை மார்பினூலும்
ஏருற்ற கனககுண் டலமுநற் கருணைசொரி
யீராறு மலர்விழிகளும்
இமயமலை மகடனப் பாலுண்ட வாயும்வடி
விலகுமயில் கொண்டகரமும்
பேருற்ற மகபதியி னகமகிழ்கு மாரியொடு
பெட்புற்ற புன்குறவர்தம்
பெண்ணையு மணந்துவெகு சதிரொடு திரிந்துவரு
பிரபலந் தனையுமடியேன்
சீருற்ற தந்திமேற் கண்டுவிரு கண்களாற்
றெரிசிக்க வந்தருளுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (1)

கனகமத னாற்செய்த வரிகளெங் கினுநல்ல
கதிர்மணிகள் தனையழுத்திக்
கவினிலரு வச்சிரத் தூண்மிக நிறுத்திமா
கதமணியி னாற்போதிகை
வனப்புற வமைத்துமா ணிக்கத் துலாமிட்டு.
மதிநிகர்த் தொளிகண்மேவும்
வண்மைசெறி காந்தத் தகட்டா லலங்கிர்த
மாகமலே மேற்சமைத்த
நனியுற்ற கோயிலிற் சிங்காத னத்திலிரு
நாயகி மருங்குசூழ
நலனுதவு செங்கோ னடாத்துநின் பெருமைதனை
நாயினேன் புகலவெளிதோ
சினைவாளை குதிகொளும் புனல்வாவி யோர்நான்கு
திக்கெலா மருவுமெழில்சேர்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (2)

நயனமோ ராயிரந் தாங்குமிந் திரனின்று
நரைநிறக் கவரிசாய்ப்ப
நானிலமெ லாஞ்சுடர்ப் பரவுநன் மதியிரவி
நாடிவெண் கவிகைதாங்கக்
கயமுகச் சூரனுயிர் நுங்குமந் தகன்வந்து
கடுகியுடை வாள்பிடிக்கக்
கனதன குபேரனின் றடைப்பையேந் தப்புனற்
கரசுகா ளாஞ்சிதூக்க
அயனுமரி யும்மறைப் பொருள்விரிக் கப்பத்த
ராகரவெனத் துதிக்க

அரமகளி ராலஞ் சுழற்றநற் பல்லியம்
　　அலைகடலின் வகுளியார்ப்பச்
செயமேவு நவவீரர் புடைசூழ நீகொலுச்
　　சேர்ந்திருதல் சொல்லவசமோ
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
　　திகழும்வடி வேன்முருகனே. (3)

மருவார் சடைப்பிரா னுதல்விழியி னிடமாறு
　　வன்பொறிக டோன்றவதனை
வாயுவுந் தேயுவுங் கொண்டுசுர நதியின்விட
　　வந்துசர வணையிலுய்த்துத்
திருவாறு மகவுரு வடைந்துநற் கார்த்திகைத்
　　தெரிவையர்க ளறுவர்தங்கள்
செழுங்களப முலைசுவைத் துண்டுவளர் தலையரன்
　　றேவிக் கியம்பவாங்கு
பெருமகிழ்வு கொண்டம்மை சரவணத் திடைவந்து
　　பெட்புற் றெடுத்தணைக்கப்
பிள்ளையோ ராறுமுக மாறுடன் வோருருப்
　　பெற்றனா னப்ரகாசா
திர †மேட மீதுசெஞ் சாந்துதிமி ருந்தனத்
　　தியர்மருவ வந்தாளுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
　　றிகழும்வடி வேன்முருகனே. (4)

உன்னத மிகுங்கௌரி மடியமரு நின்றனை
　　யுவந்துசெந் தாமரைப்பெண்
உன்முரு லென்றனக் கருளென்ன மகிழ்வுற்று
　　வுதவுவே னென்றன்மாமி

---

† மேடம்—ஆடு.

யென்றனக் குவகையொடு கைம்மா றளிப்பதை
யியம்புகென நின்றன்மார்பில்
இன்புற ஞெமுழ்ங்கவணை கொங்கைக் குறக்கொடியை
யிவனென வேவுரைக்கப்
பொன்னணிக ளைத்திருடு கள்ளக் குறத்திபோ
பேரப்போ மெனப்புகன்று
புன்னகை புரிந்துகைக் கலிகொட்டி விளையாடு
பொற்பவள சயிலதேகா
தென்னச் சிலம்பசை பதத்திறெலி கண்டுவிச்
சிறியேன் றெழுப்பெறுவனோ
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (5)

தூங்காத ரக்கடவுண் மூர்த்தியன் புக்கினிய
கனதிபெறு முமைபிராட்டி
கனிந்துநீ ராட்டிவெண் ணீற்றினொடு நெற்றியிற்
கமழ்பொட்டு மிட்டுமுடிமேற்
சிங்கார வண்சுட்டி நாற்றிவிழி கட்குமை
தீட்டிச் செவிக்கரதனஞ்
சேர்குதம் பைப்பணிகள் சாத்தியரை ஞாண்மிகச்
சீருறப் பூட்டித்தயை
தங்குமல ரடிதனிற் பரிபுரஞ் சூட்டியொளி
தருமஞ்ச நீர்சுழற்றத்
தனப்பா லருந்திவிளை யாடுநாட் போதனைத்
தாரகம் பகர்தியென்னச்
† சிங்கனூற் றிடல்கண் டவன்சிரங் குட்டிவெஞ்
சிறையிட்ட வாவுன்னருள்தா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (6)

---

† சிங்கல்—இளைத்தல்

தஞ்சமென வந்தவர்க் காதார மானவிரு
சரணகம லங்கள்கூப்பித்
தந்தியுரி போர்த்திவெம் புலியத ளுடுத்திமுன்
றுணையு மொடுக்கிவெய்ய
நஞ்சுற்ற நாகந் தனைச்சுருட் டிப்பக்க
நவ்விமழு வுந்துலங்க
நற்கங்கை வெண்பிறை கடுக்கையு மணிந்தசடை
நவிரங் குனித்துவாய்கள்
அஞ்சும் புதைத்தகங் காளன் றிருச்செவிக்
கரியபிர ணவமுரைத்த
அங்கஜ கிரீடகுச கஜவல்லி ரமணிய
அமிர்தகுண திவ்யரூபா
செஞ்சந் தெருட்சியுள பெரியார்கள் தேடுநற்
றேட்டமே யருள்வழங்காய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (7)

ஆண்டலைக் கொடிதனை யுயர்த்திதே ரேறியீ
ராயிர வெளம்பூதர்கள்
ஆர்ப்பரிக் கத்துணைவ ரொன்பா னுடன்சென்
றலைக்கணைப் போதுசகராள்
தோண்டுகட லேழுமலை யெட்டுநவ கண்டமுந்
தூளிபட வெசிதைத்துத்
துலங்குமீ ரேழுபுவ னண்டமுற் றிலுமமர்
தொடுத்துதென் றிசைமகேந்த்ரம்
ஆண்டுவரு வோனுட னெதிர்க்கமே வேழுபதி
னாயிரம் யாளிசிங்கம்

அலகைபூட் டியபொன்னி ரதமூர்ந்து போர்செய்
தயர்ந்துமா வாய்முளைத்துச்
† சீண்டற மடைந்தமர்செய் சூரனிரு கூறுறச்
செய்தவா யெனையாளுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (8)

திரிலோக மொருநொடியில் வலமாக வந்துமுன்
சேர்பவர் தமக்குவிந்தச்
செய்யமாங் கனிதனை யளிப்பனென வேசொலிச்
சிறுவனை யகற்றியண்ணன்
பெருவயிற் றோனுக் களித்தநின் பெற்றியைப்
பேசவோ வேண்டுமென்னப்
பெருஞ்சினங் கொண்டரன் பால்நிற்கு நின்னைப்
பிராட்டிகை யாலணைத்து
இருவர்களி னின்னைவேற் றுமையாய் நினைத்ததிலை
யேரம்ப னடிவலஞ்செய்
திட்டதா லீந்தோ மெனச்சொல்லி யெங்கட்கு
இனியகனி நீயலாது
தெருளுற்ற கனியுமுண் டோவென்ன மகிழ்கொண்ட
சேயனே யெனையாளுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (9)

சீருற்ற பரண்மீது நின்றுவிளை தினையினைத்
தின்றிடுங் குருவியோடத்
திடமோடு வூயா யெனக்கூய் கவண்கல்
தெறித்துவக் கொல்லைகாக்குந்

---

† சீண்டறம்—தொந்தரை, வருத்தம்.

காருற்ற வேடுவர் வளர்த்தபைங் கிளிதனைக்
கண்டுவா துகள்விளம்பிக்
காதலுற் றுக்கபட மாய்ப்புகர் முகந்தனைக்
காட்டியவள் தனைமிரட்டிச்
சோரமாய்ச் சரசங்கள் செய்துவச மாய்க்கொண்ட
சுகுர்தகல் யாணலோலா
சுந்தர கசானனன் றுணைவனே குக்குடத்
துவசனே விபுதர்பதியே
சேரற்ற வொளிமருவு தீபமே சதுர்மறைச்
செல்வமே யருள்வழங்காய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (10)

முகில்தாவு பனிமலையி னருகுநீர்ப் படுகுழியின்
மூழ்கியுமை பங்கனிருதாள்
முடியிடும் போதிலோ ரசின் பழுப்புவவர்
முன்புகிழ் விழிநீருறும்
† வகுலியொரு பாதியாய்ப் பறவையொரு பாதியாய்
வடிவமேற் றங்குபறவை
மண்கொண் டிழுக்கமீன் நீர்கொண் டிழுக்கவது
மாவிந்தை யென்றுவிதயம்
புகுந்தூச லாடுத லறிந்துபேழ் வாய்நெடும்
பூதமது நக்கீரனைப்
பொருப்புறு முழைக்குட் படுத்தவக் கணமருள்
புரிந்துவெஞ் சிறைநீத்தவா
செகமீது நாயினேன் சிந்தைதனி லுறுகுறைகள்
தீர்த்தருள்வ தொருபாரமோ
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (11)

---

† வகுலி—மீன்.

மாமதுரை தன்னின்முன் ஞான சியற்செய்து
வந்ததொரு செழியனுக்கு
வன்சுர மகற்றிவெஞ் சமணரொடு வாதுற்று
வைகையி லெதிர்த்தேகவே
நீமவே டிட்டுமவர் யாரையுங் கழுமுனை
நிறுத்திவதை பண்ணிமிக்க
நியமமுறு சைவசம யத்திநெறி தினமுமிந்
நிலமிசைப் பொய்த்திடாமல்
நாமநற் சம்பந்த னெனவந்து நிலைநாட்டி
நலமீந்த நடனலோலா
நயனமீ ரைந்நூறு தாங்குமிந் திரனுதி
நாளுந் துதிக்கும்வரதா
தேமற் படர்ந்தமுலை விண்டுகுழல் கண்டுமொழி
தெய்வானை கொழுநவெனையாள்
திருநடன மிடுநா வலங்கிரின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (12)

மின்னுமுன் சுனைமூழ்க வருவோர் தமக்குநவ
வீரரைத் தூதுவிட்டே
வெவ்வினை பறித்தவர்கள் சன்மனோ யாவும்
வெருண்டிட மருந்தளித்துப்
பன்னிருவர் போன்மகர குண்டல மிலங்குகுழை
பன்னிரண் டொடுபன்னிரு
பங்கய மலர்க்கணும் பன்னிரு புயங்களும்
பன்னிரு கரங்களுஞ்சீர்
சென்னியோ ராறுமுடி யாறுந் துலங்கநற்
செயசத்தி கொண்டுமயின்மேற்

செண்டுமுலை மடமாத ரிருபால் விளங்குறத்
தெரிசனந் தருகுமுன்றன்
சின்மயக் கருணையைப் பாதலத் தரசனுஞ்
செப்பவல் லவனல்லகாண்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (13)

குலம்விளங் கப்பிள்ளை யில்லாமன் மலடதாய்க்
குன்றிவெகு தெய்வங்கள்பாற்
குறையெலாஞ் சொல்லித் திரிந்துமா காமலிக்
குவலயந் தன்னிலுனது
தலந்தன்னில் வந்தவர்க் கடியோடு பட்டதரு
தளிர்த்துத் தழைந்துநின்றே
தக்கதொரு பூபிஞ்சு காய்த்தல்போ லுலகறிய
சந்தான பாக்கியமீயும்
வலிமையான் சொல்லுதற் கியலுமோ பைந்துளப
மாலையணி மார்பன்மருகோய்
மாவயிர துட்டநிட் டூரரண சூரசம்
மாரகம் பீரதீரா
சிலையைப் பழிக்குநுதல் வள்ளிமோ காங்கிதா
திவ்யமங் களநாயகா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (14)

கந்தருவர் விண்ணவர் குழாங்கள்படை யாகபொற்
கனகவட மேருவெற்புக்
கைவில்ல தாகவா சுகியுநா ணாகசக்
கரபாணி கணையாகமண்

செந்திரு விளங்கும்ரத மாகநற் பரிதிமதி
தேருருளை யாகநான்கு
திருமறைக ளும்புரவி யாகசெந் தாமரைச்
செழும்பொருட் டிதழ்விரித்துத்
தந்தநான் முகன்வலவ னாகவிண் முழுதாளி
சரணகம லந்துதிக்கத்
தண்பிரச மொழுகுமொழி மின்னாள் மகிழ்ந்தங்கு
சார்ந்திடப் பாகம்வளரச்
செந்நெறி யிலாதமுப் புரநிருதர் தீயெழச்
செய்தசிவ சேயெயெனையாள்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (15)

வஞ்சமன வசுரர்தலை கீழாக வானாட்டின்
வாழமரர் தலையெடுப்ப
மாங்குயிற் குதலைமொழி மருவும்பி ராட்டியிம
மலையாட்டி தலையாட்டிடக்
கஞ்சாத னத்தியொடு பாரதியு மிதயங்
கனிந்துகா னம்முழக்கக்
கங்கைநில மங்கைகடி மலர்கொண்டு கிண்கிணிக்
கால்தனிற் றூற்றமுடிமேன்
மஞ்சுற்ற வன்பாளர் கரமலர் குவித்துமதி
வதநமலர் விழியைநோக்க
மறைமுடி நடிக்குமடி களினொன்றை நன்குற
மடித்துநிர்த் தனமியற்றுஞ்
செஞ்சடைச் சங்கரர்க் கினியமக னேகருணை
செய்தாள்வ துன்கடன்காண்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (16)

பொன்னகரி லெந்தருவி னீழலரி யணையினிற்
புலவர்க ளநேகர்போற்றப்
புகலரிய வரமாதர் பற்பலர் நடிக்ககோற்
புரியுமிந் திரனுதியோர்
தன்பதவி யளவிடப் புகினுநின் பதவிக்கு
சற்றேனு மொவ்வாதுகாண்
டண்மலர் பறித்துபூ சித்தமிரு கண்டுமுனி
தனயனந் தகனினின்பாற்
றன்புறு வண்ணமெந் நாளும்வீ யாமற்
றுலங்குவர மீந்துபெரிய
சூழிமத யானையுரி போர்த்துமர னுர்தந்த
சோமவத நப்ரபோதா
தென்னெலா மோருருக் கொண்டயிக் கலியுகத்
தெய்வமே யெனையாளுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (17)

முகிலெனக் கடகளிறு வீறிடக் கரடமத
மூன்றும் பெருக்கெடுக்க
முழங்கும் பெருங்கட லுடைத்ததென நிரைநிரைய
முரிவாம் பரிநெருங்க
அகிலமுறு பூபதிகள் வாய்மடித் தேகொடிய
அறுகுபுலி போலெதிர்க்க
அறுமூன்று வக்ரோணி சேனையும் புணரியென
ஆர்ப்பமொடு வந்துசூழ
மகுடமுடி யுரககே தனன்வெகுள மறலியருள்
மைந்தன்மகிழ் கொண்டுநிற்க

மால்வைத்த மூவாறு நாடனிற் குருக்ஷேத்ர
மன்னர்போர்க் களம்விளங்கச்
செகமொளித் தேரேறு மரசர்கதை தனைமேரு
திட்டிய வனின்கனிட்டா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (18)

களபமுலை மேவுபொது வியர்மனையி னுட்சென்று
கள்வனைப் போலவுறியின்
கண்வைத்த தயிர்தனை யெடுத்துண்டு பாலையைக்
காலா லுருட்டியுள்ளங்
களிகொண்டு வெண்ணெயை யுருட்டியங் கேவருங்
காணும லுண்டுவாயுங்
கையுந் துடைத்துவிளை யாடுநற் பங்கயக்
கண்ணான் றனக்குமருகோய்
குளிர்கற்ப கந்தேனு கொண்டல்சிந் தாமணி
குலவுநிதி பற்பனவெலாங்
கூடிவள னுதவுமயி ராவதப் பாகனளி
குஞ்சரிக் கினியகணவா
தெளிவுற்ற மெய்ஞ்ஞான தேசிகா நின்பதச்
சேவைதந் தாள்வையய்யா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (19)

பகுவாய்த் திறக்குமர வக்கொடிக் குருகுலப்
பார்த்திபன் முதல்நூற்றுவர்
பதினெட்டு வக்ரோணி சேனைபடை வீரரும்
பருவெனச் செருவினிலெழ

மிகுநீதி யையருட னின்றுபற் குணன்மணி
விமானசா ரதியாகியும்
வேழத்தின் மேன்மருவு பட்டவர்த் தனர்மகுட
வர்த்தன ரெலாம்வெருண்டு
திகைக்கவனு மக்கொடிக் கதிபன்விச யம்பெருக
செகமேழு மூண்டுமிழ்ந்த
திருவாய் வலம்புரி முழக்குமான் மகள்வள்ளி
தெய்வானை யோடுமகிழ்வோய்
திருதிகென வந்திந்த நாயேனை யாட்கொளச்
சீர்மேவும் வேளையிதுகாண்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (20)

புள்ளினத் தரசன்மேற் பவனிவரு நாதனும்
போதனு மெழுந்துவெங்கோள்
புரிமருப் புறுபன்றி யாகவங் கொருவனெழு
புவனமு மிடந்துதேடக்
குள்ளமுறு மெகினமா யண்டபகி ரண்டமுங்
குடைந்தொருவ னங்குதேடக்
குடிலமுடி யடியுமவ ரறிவுறு வகைநின்ற
குணநிதிக் கினியமகனே
கள்ளொழுகு மலர்விழித் தையலித மூண்டிடக்
கருதிவெங் காமவலையிற்
கட்டுண்டு கிழவுருக் கொண்டுவயி றெக்கிமுன்
காட்டிடவவ் வள்ளியிட்ட
தெள்ளுசெந் தினைமாவை யுண்டுயிர் விடுதென்
றேக்கிட்ட வாவுன்னருள்தா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (21)

வச்சிரஞ் சகடச்சு கோமேத கந்தட்டு
வயிடூரி யம்போதிகை
வயங்குசெம் பவளத்தி னற்கால்க ளேருற்ற
மரகதத் தாற்கொடுங்கை
வச்சற்ற புட்பரா கத்தினு லொட்டுசெம்
மணியினு லோங்குகலசம்
வைத்துமய னுக்குமரி தாகச் சமைத்துவிண்
மதிநிகர்த் தொளிகண்மேவும்
உச்சித மிகுந்தரள வெண்குடை நிழற்றபல
வோவியமெ லாங்குயிற்றி
யுரகன்மரு ளக்கூவு கின்றசே வற்கொடி
யுயர்த்திபொன் னிரதமேறிச்
செச்சைப் புயங்குலவ விச்சைவரு நின்பெருமை
சிறியனுன் காண்பதென்றோ
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (22)

அரனென்ன வரியென்ன வயனென்ன விந்திரன்
அமரர்முனி வோர்களென்ன
அவனியுற் ரோரென்ன நீயென்ன விவருனை
யழைப்பதற் கென்னதவம்நீ
புரிந்தையோ விதுவரையி லுயின்முன் வந்தென்ன
புகலென்று கேட்டாயிலைப்
புண்ணியா வென்னவிறு மாப்புகா ணீபிறவி
பூண்டநற் குலவழுப்பம்
உரைத்தேக தேசமா யேசினவர் கட்கெலா
முவந்தருள் சுரப்பதன்றி
யுயர்மறைப் பொருள்விரித் தோதித் துதிப்பவர்க்
குதவனும் மிடமில்லையோ

தெரிவுற்ற குஞ்சரி குலாவுமலை யேயெனது
சிந்தைவளர் கற்பதருவே
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (23)

சந்ததமு நின்றனைப் போற்றுமெய் யடியார்க
டன்பிறப் பிணியொழித்துத்
தகுவாழ்வும் நற்பெரும் பேறுங் கொடுத்தருள்செய்
சண்முகப் பேராளனென்
றெந்தையே யநவரத நின்றனிரு வடிமல
ரிறைஞ்சித் துதிக்குநாயேன்
இடர்நீக்கி யருள்செயா தென்னகா ணுன்மன
மிரும்போ பெரும்பாறையோ
கொந்தார் குரும்பையிள வனமுலை முகக்கோடு
குத்துமட வார்கள்காமக்
கொடுங்கடலின் மூழ்கியுழல் வோனெனினு நின்னருள்
கொடுத்துரட் சிக்கொணாதோ
சிந்தொத்த விலாசநேத் திரமதுர பாஷணு
திவ்யமணி மயபூஷணு
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (24)

புயற்றுளி யிறைக்கும்வெண் டிரைமூழ்கி யேழுவெம்
புரவியொடு வொற்றையாழி
பூட்டிய தடந்தேரி லேறிவே தாகமம்
பூசுரர் கனிந்திறைஞ்சக்
கயக்கடற் றிரையைக் கலக்கியூ ழியினிருட்
கங்குமுற் றுந்துடைத்துக்

கனசுடர் விரித்துவரு பன்னிரு பதங்கரொளி
கல்வுஞா னப்ரகாசா
மயக்கந் தருங்குரும் பைக்களப முலைமாதர்
வலையில்மயல் கொண்டுநின்சீர்
மலரடி துதித்திடாப் புல்லனெனி னுங்கருணை
வைத்தாள வேளையிதுகாண்
செயசெய வெனச்சொலிச் சிந்திக்கு மடியார்கள்
சித்தத்தி லெழுமுவப்பே
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (25)

பொய்வைத்த சிந்தைமட மங்கையர்கள் வாசனைப்
பூங்குழல் விரித்துமதியைப்
போன்றவொளி முகமேவும் வேலனைய விழிகணிமை
பொருதாது சைகைகாட்டிச்
செய்தொப்ப மிட்டபொற் செப்பென்னு முலையாடை
சிறிதங்கு நெகிழவிட்டுத்
தேசுற்ற கைகளால் வாவென் றழைத்தவர்கள்
தேன்பொழியும் வாய்திறந்து
ஐயனே யெனைப்பிரியி னுயிர்விடுவ னென்றவ
ரணைத்துகை லாகுவிந்து
அணைமிசை கிடத்திப் பொருக்கெனத் தோயுமின்
னார்தங்க ளூட்டுகலவிச்
செய்கைவிழ்ந் துழலாது நின்பதத் தொண்டுநான்
செய்துய்ய வருள்புரிகுவாய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (26)

மதியாமல் வேள்விபுரி தக்கனின் றலையுமொரு
　　வழியாக வெள்ளிவிழியும்
வடுப்படப் புருகூதன் வேறுவடி வங்கொண்டு
　　வானிற் பறக்கமறையின்
விதிசென்னி தனைவடுக மூர்த்திதிரு கச்சுரர்கள்
　　வெஞ்சிறைப் பட்டுவுழல
வெய்யசூர் கிளைகளொடு மடியமன் மதனுடல்
　　வெந்துநீ றாய்ப்பொடிப்பச்
சதியுற்ற துரியோத னாதிநூற் றுவர்களுஞ்
　　சமரில்மாய்ந் திடவுமறலி
தான்பட்ட வதையும் வினைப்பயனை யல்லாது
　　சாற்றவெவ் வகையுமுண்டோ
திதலைவிரி கன்முலைத் தெய்வகுஞ் சரிவள்ளி
　　செறியப் புணர்ந்தமார்பா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
　　றிகழும்வடி வேன்முருகனே. (27)

அட்டதிசை புகழ்மேவ வாழ்ந்தென்ன தனதனே
　　ரரும்பொரு ளிருந்துமென்ன
அழகுற்ற மாடமா ளிகைபல விருந்தென்ன
　　அறுசுவையோ டுண்டுமென்ன
யிட்டமிகு நன்மக்கண் மனைவிய ரிருந்தென்ன
　　யேறுகரி பரிகண்மோட்டார்
இருந்தென்ன வணிபணிகள் பூண்டென்ன பூவணையி
　　லேறித் துயின்றுமென்ன
கட்டாக வுறவினர்கள் பக்கத் திருந்தென்ன
　　கலைகள்பல கற்றுமென்ன
கனவனு விருந்தென்ன வுடல்பெருத் தென்னவுன்
　　கருணைமே வாற்குமுத்தி

திட்டமா யில்லையெனி லிவையெலாம் நல்குமோ
தெரியவுரை செய்யுமித்ரா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (28)

மும்மூர்த்தி நிலைகொள்ள விண்ணவர் குழாங்கடன்
முடியுமீன் சுமையுமாற
முனிவோர்கண் முடிதாங்கும் வெறிமதுக் குடமாற
மூரிப் பணைத்துமார்பில்
விம்முமுலை மடவார்கள் பூமுடி தனிற்றினம்
விளங்குநீர்க் குடமுமாற
மேற்றிசைப் பாலனுத யத்தினிற் சாணிநீர்
வீழ்த்தும்வெவ் வினையுமாற
பைம்பொனரண் மனைவாயின் முன்றிலிற் றாளுதறு
பவனன் பவங்கள்மாறப்
பகலொளியை மாற்றுமுயர் தூண்டா விளக்கேற்று
பாவகன் றுயரமாறச்
சிம்முக னின்குலந் தேய்த்தருள் புரிந்தவா
சிறியன்மிடி மாறவருள்செய்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (29)

ஆய்ப்பாடி தன்னிலுன் மாயனைத் திருடினு
னதற்குமுன் குறக்கொடியினை
அரும்புனந் தன்னினீ திருடினு யண்ணனும்
அதற்குதவி யாயிருந்தான்
றாயுமுன் றந்தையுந் தொண்டர்செய் யும்பவந்
தனைத்திருடி வருகலுற்றார்

சாமிநீ யென்பவந் திருடினூற் பினற்கோர்ட்டு
சக்ஷனுக் காளாவயோ
வாயார வாழ்த்துமடி யார்பவந் திருடனுன்
வங்கிஷ வழக்கமலவோ
வழிதப்பி விடினுமவர் தொழில்தப்பி டாதுலகில்
வரவேண்டு மென்பததுபோற்
றேய்வற்ற பிறைநிறைச் சேவகா என்றன்வினை
திருடுவது முன்பரங்காண்
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (30)

பொன்னூடு வேண்டிலே னளகையது வேண்டிலேன்
புகழ்போத னகர்வேண்டிலேன்
பொற்பமைந் திடுபுவிகள் முழுதாள வேண்டிலேன்
பொருள்பூ டணம்வேண்டிலேன்
மின்னனைய நகையார்க ளுறவையும் வேண்டிலேன்
விண்டுவின் னகர்வேண்டிலேன்
விரைமேவு பனிமலர்கள் கொண்டுநின் பாதார
விந்தமர்ச் சித்துதிசெய்
யன்பருக் கன்பனாய் நின்பணி யியற்றுநல்
லடியார்க ளொடுகூடிநான்
அநவரத நின்பணிகள் புரிதல்வேண் டும்மிஃது
அடியனேற் கருள்செய்குவாய்
சின்மய சொரூபசித் தியானந்த பரப்ரம்ம
செகசோதி யருள்பாலகா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (31)

பாதாதிகேசச் சிறப்பு.

பரிபுரப் பாதமும் பொன்னினரை ஞாணுநற்
பட்டாடை யணிமருங்கும்
பகலொளியை மாற்றுமணி மாலைமார் பும்புயப்
பந்தியுங் குண்டலங்கள்
தரித்தவீ ராறுசெவி யுங்குமுத வாய்ப்பொலிசெய்
தரளநிகர் வெண்முறுவலுஞ்
சந்தமிகு நெற்றியிற் பட்டமுஞ் சுட்டியுஞ்
சந்த்ரமறு வனையபொட்டும்
அருள்சுரக் குங்கருணை விழிகளுஞ் சோமகிர
ணங்கணிறை யாறுமுகமோ
டன்புநிறை வள்ளிகுஞ் சரிமருவ மஞ்ஞைமே
லடியனேன் காணவருவாய்
திரைகடலு மரவணையி லரியுமன மறுகியலை
சிதறவயில் விட்டவீரா
திருநடன மிடுநா வலங்கிரியின் மயில்தனிற்
றிகழும்வடி வேன்முருகனே. (32)

(நேரிசை வெண்பா)

அண்டங்க ளாயிரத்தோ டெட்டுநூற் றெட்டுயுகந்
தண்டுகை யேற்றுவர சாட்சிபுரி—மண்டலிகன்
ஆவா வெனவசுரர்க் காய்வரமீந் தோன்மகனே
வாவா வினைதீர்க்க வா. (1)

அப்பனே வாவென் றழைத்தும்நீ வாராதேன்
ஒப்பற்ற மாமயில்விட் டோடியதோ—இப்புவியிற்
சீலம் புரியாச் சிறுவனென்றோ அன்றுகலி
காலமோ சொல்லிவிடுங் காண். (2)

நன்றென்றுந் தீதென்றும் நன்குணரா தவண்ணம்
என்றும் பவமிழைக்கும் இந்நாயேன்—உன்றனக்கு
எட்டியே யானாலும் இன்ப மிகுங்கருப்பங்
கட்டியே நீயெனக்குக் காண். (3)

அண்ட முகடிடிய வட்டகசங் கெட்டுலையக்
கொண்டல் சிதறக் குலவரைகள்—துண்டுபடப்
பொங்கரவு மெய்நடுங்கப் போரில்வெவ் வேலெடுத்த
சிங்கமே யென்கவலை தீர். (4)

பேரழகு வாய்மயிற்கண் பெற்றநறுந் தோகையே
சீரழகுப் பெண்கள் சிகாமணியே—வாரழகு
பூண்கலசக் கொங்கைகுறப் பொற்பாவா யென்றிருதாள்
தீண்டியவா என்மிடியைத் தீர். (5)

மஞ்சுலவ மிஞ்சும் வரையா றுகந்தகந்தா
பஞ்சைக் கிரங்கியருள் பாலிப்பாய்—வஞ்சமனத்
தானவரைக் கொன்றமரர் தங்குஞ் சிறைவிடுத்த
தானுவே யின்றேநீ தான். (6)

ஆறு படைவீடுகள்.

பீடுபரங் குன்றுசெந்தூர் பெட்பாவி னன்குடிசீர்
கூடுதிரு வேரகங் குன்றுதோ—றூடல்
கனியுதிருஞ் சோலையுர்வாழ் கந்தப்பா நாயேன்
றனையாள்வ துன்பாரந் தான். (7)

பாதார விந்தங்கண்டு தரிசிப்போர் பெறுபயன்.

தொல்லமரர் விஞ்சையருந் தும்புருவர் நாரதரும்
நல்லபணி மாயவரால் நாள்தூற்றுஞ்—செல்விவளர்
கஞ்சமலர்ப் பொற்பாதங் கண்டோர்க்கு வாழ்வுமிகும்
பஞ்சாய் வினைபறக்கும் பார். (8)

பொற்புமுக மாறுமருட் பொங்குவிழி யீராறும்
அற்புதஞ்சேர் நீப மணிமார்பும்—கற்பு
படக்கொடியுங் கைவேலும் மாமயின்மேற் கண்டோர்
திடத்துடனே வாழ்வார் தினம். (9)

மானும் பிடியும் மருவமயின் மீதுவளர்
ஞானவடி வேற்கொண்ட நாதனை—ஆனவுடன்
மெய்சிலிர்க்கப் போற்றின் வினைகள்யா வுந்தொலைந்து
ஐயமற விடுவரு மன்றோ. (10)

ஆக்கியோன் பெயரும் இந்நூலைத் துதிப்போர் பெறுபயனும்.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

நாவலங் கிரியின் மயூரமேற் றிகழும்
நலமிகு முருகவே டனக்குள்
ளாவலாய் விரசை நகர்தனில் வாழும்
அம்பலச் செட்டியா ரென்னும்
பாவலன் சொல்லும் புகழ்மணிப் பாவைப்
பரிவுட னுலகினிற் றுதிப்போர்
தேவர்கள் போற்ற வாழ்ந்துநற் பதவி
சேருவர் நிச்சய மாமே.

இந்நூலை அச்சியற்றியவர் பெறுபயன்.

(நேரிசை வெண்பா)

சம்புகிரி வாழ்முருகன் றன்மைபுகழ் மாலைதனை
அம்புவியி லேதுதிக்க வச்சிட்ட—நம்பன்
திருவருள்சேர் வீரப்ப செட்டியா ரின்ப
இருநிதியும் பெற்றுய்ய என்றும்.

வாழி.

(சந்தவிருத்தம்)

வங்க மாமலை வாழரன் வாழிதன்
மங்கை யம்பிகை வைங்கரன் வாழிநற்
றிங்க மாமதி யுங்கதிர் வாழிநீர்
சூழ்ந்த வாரிதி மேதினி வாழிமெய்த்
தங்கு நான்மறை மாலயன் வாழிசீர்
சார்ந்த மன்னவர் விண்ணவர் வாழியோர்
பொங்கு மாமயில் வேலவன் வாழிவார்
பூணும் வள்ளிபொற் குஞ்சரி வாழியே.

அற்புதஞ்சேர் சம்புகிரி ஆறுமுக வேலவனின்
முற்றமிழ்சேர் பாமாலை **முற்றிற்றுப்**—பெற்றதற்குச்
சந்தக் குறக்கொடியாள் தான்வெருளக் கான்வந்த
சுந்தரமெய்த் தந்தி துணை.

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் துணை.

ஸ்ரீ சுப்பிரமணியர் மீது

அறுபத்துநான்கடி ஆசிரியவிருத்தம்.

சீருற்ற மரகதக் குவடொன்று நடையுற்று
சிறைபெற்று வருதல்கண்டு
திரிலோக முந்திசையு மண்டமு மகண்டமுந்
திகிலுற் றொடுங்கிமருளத்
திகழ்சக்ர வாளமொரு காற்றாடி போற்றிரிய
திக்கிலுறு மலைகளெட்டுந்
திடுதிடென நெரியவட மேருகிரி முறிபடத்
திரைகடற் புனலும்வறளத்
திங்களா தித்தனொளி கெட்டிராப் பகலெல்லை
தெரியாமல் நின்றுசோரச்
சேடனா தியவட்ட நாகம் பயந்துளைச்
சிரநெளித் திடவுடுக்கள்
சிதறிடக் கேதுரா குக்களுள மஞ்சவிதி
செய்தொழின் மறந்துநிற்கத்
தேவேந்தி ரன்றனது போகம்விட் டோடிடத்
தேவர்க ளெலாம்நடுங்கத்
திருமாலு மனைகளொடு பாற்கடற் சென்றினிச்
செய்குவதி யாதோவெனத்
திசைப்புறப் பல்லண்ட கோளகை படீரெனத்
தெறித்துகோத் திரையில்வீழ்கத்

திக்கட்ட கடகரிகள் வீறிடத் தானவர்கள்
        சித்தங் கலங்கநெட்டைச்
சிறகினை விரித்தூழி மாருதத் தைக்கடிந்
        திட்டுயுக முடிவோவெனச்
செகமெலாம் பதறவாய் விட்டுக்ர கர்ச்சனைகள்
        செய்துலக முழுதும்வலமாய்ச்
சென்றுவரை நொடியில்வரு மயிலேறும் நாயகா
        செப்பரிய மாய்கைபுரியுந்
திடமுற்ற வஞ்சகிர வுஞ்சனுந் துஞ்சிடச்
        செகுத்தவனின் வாழ்வைநூறித்
தீயவசு ராதிகளை மாத்திரைப் போதுக்குள்
        செந்நீ ரிடைப்படுத்திக்
கூறுற்ற சத்திவேற் கொண்டுசூர் மாவையிரு
        கூறுகொண் டண்டருற்ற
கொடுஞ்சிறை தவிர்த்துவிண் ணரசுரிமை யைப்பெறக்
        கொடுத்தருளி நற்கீரன்முன்
கூறுசெந் தமிழ்மாலை கேட்டவன் புகும்வரை
        குலைந்துபின் னங்களாகக்
கொதிப்புட னிடித்துவட வைக்கனலும் வெட்குறக்
        கொடியதீப் பொறிகள்கான்றக்
கோடிசூ ரியனென்று கூடியுத யஞ்செய்த
        கொள்கைபோ லொளிபரப்பிக்
கொண்டுவிளை யாடிவரு மணிமந்த்ர சொரூபனே
        குளிர்மதி முடித்துநதியின்
கோவார்ந்த பணநாக சங்கவெண் குண்டலங்
        குலவுநற் சங்கரற்குக்
குருவா யிருந்துவோம் பொருடனைச் செவியினிற்
        கொள்ளவுரை செய்துகொண்டற்

குமுறும் பரங்குன்று செந்திற்திரு வாவினங்
குடியேர கம்பலகனி
கொட்டுநற் சோலைமலை யொடுகுன்று தோறுடல்
குடிகொள்ஞா னப்பிழம்பே
குறவர்பெண் மீதிச்சை வைத்தவ ளூறுந்தினைக்.
கொல்லையை யடைந்துவிரைவிற்
குதைபூட்டி வில்லம்பு கொண்டுவே டுவனெனக்
கோதைமுன் சென்றுபலவார்
குயிற்றிநற் சந்யாச வடிவமுற் றவடாருங்
கோதற்ற தினைமாவையுட்
கொண்டுவிக் கித்தண்ணீர் வேண்டுமென் றவடனைக்
கொண்டுசேர் சுனையினருகிற்
கோரமத யானையைக் காட்டவவ ளுள்ளங்
குலைந்துநின் சொற்கிணங்கக்
கொடுங்கானில் வதுவைபுரி யாதுபடு மோசமாய்க்
கூடிக் கலந்தகுமரா
தாருற்ற மாலையணி மார்பனே யகிலநிறை
சர்வஜீ வாத்மரூத்ரா
தடமுற்ற காசிபர்க் கினியமனை யதிதிசெய்
தவங்கண்டோ ராறுருடாறு
சந்தான பாக்கிய மளித்தவ ளகத்துறுஞ்
சஞ்சல மொழித்தவரதா
சந்ததமு முருகா வெனச்சொலுந் தெரிவைமுன்
சத்திவடி வேலிலங்கத்
தடநடன மிடுமஞ்ஞை மீதிவர்ந் தவள்மனச்
சங்கட மகற்றியானந்
தச்சா கரந்தனில் மூழ்குவித் துயர்வண்மை
தங்கும்விண் சொர்க்கமேவித்

தன்றேவி மார்களிரு பேர்க்குநற்குற்றேவல்
தடையின்றி நீபுரியெனத்
தண்ணொளி சுரந்துவருள் செய்தமுரு காபெருந்
தவமுனிவ ரேத்துசரணு
சதுர்முக னகங்கார முற்றுவேற் கென்றனின்
சக்தியாற் பெருமையென்று
சபையிற் புகன்றிடக் காய்ந்துநீ வேடனாய்த்
தாலம் பிறப்பாயெனச்
சபிக்கக் கொலைத்தொழில் புரிந்திமய மலையடிச்
சாரலில் வெம்பசியினாற்
றவிக்கையிற் பிப்பலா தவமுனிவ ரவ்வழி
தனிற்செலக் கண்டுவோடித்
தன்னிரு கரத்தினாற் கட்டவம் முனிகந்த
சாமியின் புகழ்பாடவே
சரணமென் றவரடி துதித்துத் தனக்குரிய
சாபவர லாறுமுற்றுந்
தவறு துரைக்கமுனி மகிழ்கொண்டு கார்த்திகை
தனில்விரத மேற்பையென்று
சாற்றவவ் விரதப் பலத்தினான் முன்பெற்ற
சாபம தகன்றுபுவியில்
ஏருற்ற வரசனா யந்திமா னென்றுபெய
ரெங்கும்ப்ர சித்தமாக
இடையேழு வள்ளல்களி லிவனொருவ னாய்ச்செய்து
மிறுதியிற் பிரமனாக்கி
என்றும்நீ செய்தொழி லியற்றென்ன வருள்செய்த
வெந்தையே வச்ரதேகா
எழினுற்ற வுலகாத்ம ரட்சகா சின்மய
மிலங்குகா ருண்யலோலா

இனியகா னப்பிரிய வல்லிமோ காங்கிதா
யின்பம் பயக்குமுதல்வா
யிறிலாக் கருணைமழை பெய்யுமுகி லேகோடி
யிந்துவொளி பரவுமுருவே
யிட்டகா மியமோட்ச மீயுந் தயாநிதே
யியம்பரிய சதுர்வேதமே
யிச்சைதரு போகமுணர் கமலாச னன்றலையி
னிற்குட்டி வலியசிறையில்
இட்டவுல் லாசபரி பூரண மனோகரா
யேகாந்த கோலாகலா
இணையிலாக் கற்பகச் சோலையே யுறைகலி
யிழைக்கப் படாதபொன்னே
யேழைக் கனுக்கிரக மெய்தியா பத்தில்வந்
தெதிரினின் றுதவும்நேயா
யிபமுகவ னுக்கிளைய சோதரா சரவணத்
திடைவந்த கார்த்திகேயா
எட்டாத கொம்பிற் பழுத்தகனி வர்க்கமே
யென்னுளத் தெழுமுவப்பே
யிசைமணிக ளொலிதருங் கமலபா தாகலப
மேறுமா னந்தலோலா
எளியே னிடும்பைத் தவிர்த்தென்னை யாட்கொள்ள
இதுவேளை வந்தருளுவாய்
இரவிசுட ருமிழுமணி மகுடமுடி யரசர்பணி
யிறைசுப்ர மண்யகுருவே.

முற்றிற்று.

சந்தத் திருப்புகழ்

தனன தந்தன தானன தந்தன
தனன தந்தன தானன தந்தன
தனன தந்தன தானன தந்தன தனதான

திருவி ளங்கிய வாசவன் மங்கையும்
உருவ நன்கமை வேடுவ மங்கையும்
திரும ணம்புணர் நாயக குன்றகம்
உறைவோனே.

தெளிவ ரும்பொரு ளாகிய சங்கரன்
நுதலி னம்பக வாரழல் வந்துறு
சிறுவ தண்டமிழ் நூலக னைந்திணை
தருவோனே.

பருவ மங்கையர் காதலி னெஞ்சகம்
உருகி யின்புற நாளும லைந்துழல்
பதகர் சங்கம தேபயில் வஞ்சக
நெறியாலே.

பளகில் பண்டையர் தேடிய நன்பொருள்
மிகவு நன்றறு வாழ்வின ழிந்துகு
பரிசு கண்டன ஞசம டைந்திழி
கடையேனை.

அருள்ம லிந்தநி ணறிரு கண்களின்
உரிமை யொன்றிய பேறுற விம்பரின்
அருமை பொங்கிய வாழ்வுறு கென்றருள்
பொழிவாயே.

அடிமை கொண்டவர் பாவிய ரென்கினும்
நெடிது சஞ்சல மேவுத லின்றியே
அருள முந்துறு வேலவ வென்கணும்
அருள்வாயே.

விரிவு கொண்டப லாலயம் வந்தனை
சிறிய நெஞ்சுளும் வாழவு வந்தனை
விமல வண்டர்கள் காவல சங்கரி
தருவாழ்வே.

விசய சங்கர வேல்மயில் கொண்டருள்
முருக தஞ்சென நாயைநி னைந்தருள்
விரகு குன்றினில் மேவிய மர்ந்தருள்
பெருமாளே.

தனதத் தான தனதத் தான தனதான
தனதத் தான தனதத் தான தனதான

அருளைப் பூணு முருவச் சேவல் மயிலோனே
அடிமைப் பேறு பெறவுற் றேனை யறிவாயே

பொருளைத் தேடி மயலைக் கூடு முளனாலே
புலமைச் சீர்மை தருமெய்ப் பாடு தெரியேனை

இருளைச் சேரு முலகப் போரி லுழலாதே
இணையற் றோறு கழலிற் சார வருள்வாயே

மருளைக் கோறு மயிலைத் தேறு முருகோனே
மலையிற் கோயில் வருமெய்த் தேவர் பெருமாளே.

முற்றிற்று.

திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்.

ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், சனனசௌ
மரணசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்த
மூக்குநீர் சிந்துதல், அபானவாயுவிடுதல், பாக்குவெற்றிலையுண்ட
தம்பலமுமிழ்தல், போசனபானம் பண்ணுதல், நித்திரைசெய்த
க்ஷௌரம் பண்ணுவித்துக் கொள்ளுதல், எண்ணெய் தேய்த்த
தலைபார்த்தல், மயிர்கோதிமுடித்தல், சூதாடல், சிரசிலே வேட்ட
கட்டிக்கொள்ளுதல், தோளிலே உத்தரீய மிட்டுக்கொள்ளுதல்
போர்த்துக்கொள்ளுதல், சட்டையிடுதல், வாகனமேறிச் செல்லுதல்
குடைபிடித்துக்கொள்ளுதல், தீவர்த்தி பிடித்துக்கொள்ளுதல்
உன்னததானத்திருத்தல், ஆசனத்திருத்தல், தூபி துசத்தம்ப
பலிபீடம், வாகனாதிகள் விக்கிரகம் என்னும் இவைகளின் சாயையை
மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையுந் தீண்டுதல், திரு
விளக்குச் சாயையிலும் தெய்வத்தின் சாயையிலும் தன்னிழலிடுதல்
பெண்களைப் புகழ்தல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்
துப் பார்த்தல், பெண்களைப் புணர்தல், தெற்கு நோக்கிய சந்நிதி
யிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியிலும், இடப்பக்கத்தில் செபமும்
நமஸ்காரமும் பண்ணுதல், ஒருதரம் இருதரம் வலம்வருதல், ஒடி
வலம்வருதல், தெய்வங்களுக்கும் அதன்முன் ஸ்தாபனமாயுள்ள வாக
னாதிகளுக்கும் குறுக்கேபோதல், அவர்களுக்குப் புறங்காட்டுதல், ஒரு
கை குவித்தல், அகாலத்திலே தரிசித்தல், தெய்வத்துக்கும் பலி
பீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், வீண்பேசுதல், அசப்பியம்
பேசுதல், அசப்பியங்கேட்டல், சிரித்தல், வீண்கீதம் பாடல், வீண்
கீதம் கேட்டல், கோயில் திரவியத்தை இச்சித்தல், கீழ்மக்களைப்
புகழ்தல், மேன்மக்களை இகழ்தல், துர்த்தேவதைகளை வழிபடுதல்
தெய்வங்களை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் இடப்பக்கத்தும்
நின்று வணங்குதல், திருவிளக்கு அவியக்கண்டும் தூண்டாதொழி
தல், திருவிளக்கில்லாதபோது வணங்குதல், சுவாமி தரிசனத்
துக்காகச் செல்லுங்காலத்தில் கொண்டுபோகும் தீபத்தை கோயி
லுக்குள் அணைத்துவைத்தல், உற்சவங் கொண்டருளும்பொழுது
அங்கேயன்றி உள்ளேபோய் வணங்குதல், முதலியனவாம். சி
தீர்த்தம் திருநந்தனவனம் திருமடம் என்னும் இவைகளில் மலசல
கழித்தல், எச்சிலுமிழ்தல், மூக்குநீர் சிந்துதல், பற்றுலக்காது
ஸ்நானஞ்செய்யாது புட்பமெடுத்தல், புட்ப சாதிகளன்றி வேறு
பயிரிடுதல், புணர்ச்சி முதலிய அசுசிகளைச் செய்யலாகாது. இக்குற்
றங்களைச் செய்தவர்கள் நரகத்தில் விழுந்து வருந்துவர்.

கோவாபரேடிவ் பிரஸ், லிமிடெட், புதுக்கோட்டை.

பிழை—திருத்தம்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
7	மயிலின் பெருமை	4	புகழு	புகளு
8	வேலின் பெருமை	8	தேடக்	தேடத்
12	3	6	திகழு	றிகழு
13	6	10	மஞ்சநீர்	மஞ்சணீர்
14	7	13	செஞ்சந்	செஞ்சத்
24	24	6	ரிரைஞ்சி	ரிறைஞ்சி
26	28	5	யிட்ட	விட்ட
,,	,,	6	யேறு	வேறு

உ

ஸ்ரீ முருகக் கடவுளின் பிரதாபம் அனைத்தும் கால்வீசங் கலைமுதல் ஆறுகலை வரையில் வண்ண மாக இயற்றி "**சண்முகவண்ணம்**" என்ற பெய ருடன் முற்றுப்பெற்றிருக்கிறது.

அச்சிட விரும்புவோர்கள் தெரிவிக்கலாம்.

மதுரகவி வித்துவான்,
சு. அ. சு. சுப்பிரமணியஞ்செட்டியார்,
விரையாச்சிலை,
புதுக்கோட்டை ஸ்டேட்.

கோவாபரேடிவ் பிரஸ், லிமிடெட், புதுக்கோட்டை.